TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 808 I1929

1. District மாவட்டம் : Madurai    PS: காவல்நிலையம் : V&AC    Year: ஆண்டு 2022    FIR No. மு.த.அ. எண் 04/2022    Date: நாள் 17.05.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988    Sections பிரிவுகள்: U/S 7 of PC Act 1988
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: as amended by the
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: PC (amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை (1) 13.05.2022 at 14.30 hrs
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.05.2022    Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.05.2022    Time : நேரம் 11.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தட்டச்சு செய்த புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 10 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மாடக்குளம், மதுரை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :    District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. A. சுகுமார்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அய்யாதுரை
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 39/2022    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வியாபாரம்    (g) Address : முகவரி பிளாட் எண்.10, அம்பிகை நகர் முதல் தெரு, புதுக்குளம் 2வது பிட், கண்மாய்கரை, பழங்காநத்தம் (PO) மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பாலமுருகன், சர்வேயர், புதுக்குளம் 2வது பிட், திருப்பரங்குன்றம் தாலுகா, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S.A. [signature] 17.5.2022 | [signature] 17/5/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

17.05.2022 at 11.05 hrs.

Name: பெயர் A. அம்புரோஸ் ஜெயராஜா
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ..........
உள. த. க. பிரிவு,
மதுரை.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 17.05.2022-ஆம் தேதி 09.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்து போது, மதுரை, பழங்காநத்தம் அஞ்சல், கண்மாய்க்கரை, புதுக்குளம் 2 - வது பிட், அம்பிகை நகர் முதல் தெரு, பிளாட் எண் 10 என்ற முகவரியில் வசிக்கும் அய்யாத்துரை மகன் திரு. S.A. சுகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், S.A.சுகுமார், த/பெ அய்யாத்துரை, பிளாட் எண் 10, அம்பிகை நகர் முதல் தெரு, புதுக்குளம் 2-வது பிட், கண்மாய்கரை, பழங்காநத்தம் அஞ்சல், மதுரை - 3. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மேலே கண்ட முகவரியில் எனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்வீட் மாஸ்டர் தொழில் செய்து பிழைத்து வருகிறேன். நான் தற்போது குடியிருக்கும் 512 சதுரடி இடத்திலுள்ள வீட்டை கடந்த 03.06.2020-ம் தேதி எனது பெயரில் விலைக்கு வாங்கி திருப்பரங்குன்றம் சார் பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் முடித்தேன். அதன் ஆவணம் எண் 1338/2020 ஆகும். அதன் புல எண் புதுக்குளம் 2வது பிட் ரீசர்வே எண். 13/7A1A ஆகும். எனது வீட்டின் பட்டா அதன் முந்தைய உரிமையாளரான திரு.A.பிச்சைத்தேவர் மற்றும் திருமதி.பொன்னுத்தாய் ஆகியோர் பெயரில் இதுநாள் வரை உள்ளது. வங்கியில் லோன் பெற்ற போது எனது பெயரில் பட்டாவை மாற்றித் தருமாறு கேட்டார்கள். எனவே, எனது பெயரில் பட்டா மாறுதல் செய்து கொடுக்குமாறு கடந்த 18.02.2021-ம் தேதியன்று திருப்பரங்குன்றம் தாசில்தார் அவர்களுக்கு இ சேவை மையம் மூலம் விண்ணப்பம் செய்தேன். அதன் பின்னர் கொரோனா நோய் வேகமாக பரவிய காரணத்தால் என் விண்ணப்பத்தை கடந்த 30.06.2021-ம் தேதி நிராகரித்து விட்டார்கள் என பின்னர் தெரிந்து கொண்டேன். எனவே, நான் சோலை அழகுபுரத்தில் உள்ள அரசு இ சேவை மையத்தின் மூலம் கடந்த வாரம் 09.05.2022-ம் தேதியன்று உட்பிரிவு பட்டா மாறுதல் வேண்டி மீண்டும் விண்ணப்பம் செய்தேன். அப்போது எனது வீட்டின் சொத்துப் பத்திரம், மூலப் பத்திரம், வில்லங்கச் சான்று

நகல்கள் கணிணி மூலம் எனது விண்ணப்பத்துடன் ஏற்றப்பட்டது. பின்னர் இ சேவை மையத்தின் ஊழியர் என்னிடம் உங்கள் பகுதியின் சர்வேயர் பார்வைக்கு விண்ணப்பம் சென்றுவிடும், எனவே மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் நக்ல்களுடன் அவரை நேரில் சென்று பாருங்கள் என்று கூறினார். அதன் பேரில் நான் கடந்த 13.05.2022-ம் தேதி மதியம் சுமார் 2.30 மணியளவில் பழங்காநத்தம் - மாடக்குளம் ரோட்டில் உள்ள கிராம நிர்வாக அலுவலகத்தில் நான் ஆவணங்களுடன் நேரில் சென்று விசாரித்த போது திரு.பாலமுருகன் என்பவர் எங்கள் பகுதி சர்வேயர் என்றும், அவர் இங்குதான் வருவார் என்றும் சொன்னார்கள். எனவே, நான் அங்கு காத்திருந்தேன். சிறிது நேரம் கழித்து அங்கு வந்த சர்வேயர் திரு.பாலமுருகன் என்பவரைச் சந்தித்து, அவரிடம் எனது பெயரில் விண்ணப்பம் செய்த பட்டா உட்பிரிவு மாறுதல் ஒப்புகைச் சீட்டைக் காண்பித்து எனது வீட்டு ஆவணங்களின் நகல்களைக் கொடுத்தேன். அவர் அதனைப் பார்த்த பின்னர், உங்கள் விண்ணப்பம் என்னிடம் வந்துள்ளது என்று சொன்னார். பின்னர் எனது வீட்டின் பத்திரத்தை படித்துப் பார்த்து விட்டு, எல்லாம் சரியாக உள்ளது, ஒன்றும் பிரச்சனை இல்லை, உங்கள் வீட்டை நேரில் வந்து அளந்து பார்த்த பின்னர் பட்டா உட்பிரிவு மாற்றம் செய்து அறிக்கையை அனுப்பி பட்டா பெயர் மாற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொன்னார். நான் அவரிடம் எங்கள் வீட்டைப் பார்க்க எப்போது வருகிறீர்கள் சார் என்று கேட்டேன். அதற்கு அவர் உட்பிரிவு பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.7,000/- செலவாகும் என்றும், பணம் தயாரானவுடன் நேரில் வந்து பாருங்கள், நான் உங்கள் வீட்டைப் பார்க்க வருகிறேன் என்று சொன்னார். நான் அவரிடம் பட்டா மாறுதல் செய்து உத்தரவு பெறுவதற்கு அரசுக்கு பணம் ஏதும் கட்ட வேண்டுமா சார் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் அரசுக்கு பணம் கட்டத் தேவையில்லை, எனது செலவுக்கு கொடுக்க வேண்டும், அப்போதுதான் வேகமாக வேலை முடியும் என்று சொன்னார். நான் அவரிடம் நீங்கள் கேட்கும் பணம் அதிகமாக உள்ளது, கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி இரண்டாயிரம் ரூபாய் குறைத்துக் கொள்கிறேன், 5,000/- ரூபாய் கொடுத்தால் பட்டா உட்பிரிவு பெயர் மாற்றம் செய்து தருகிறேன், பணம் கொண்டு

வரும் போது வீட்டின் பத்திர நகல், மூலப் பத்திரம் ஆகியவற்றின் நகல்களைக் கொண்டு வாருங்கள், வாங்கிக் கொள்கிறேன் என்று கண்டிப்பாக கூறி, நான் கொடுத்த ஆவணங்களின் நகல்களை வாங்காமல் என்னிடமே அவற்றை திருப்பிக் கொடுத்து அனுப்பி விட்டார். நான் வீட்டுக்கு வந்து யோசித்துப் பார்த்தேன். அவருக்கு லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே, அரசு இலவசமாக வழங்கும் பட்டாவை எனது பெயரில் உட்பிரிவு பட்டா உட்பிரிவு பெயர் மாற்றத்துக்கு ஏற்பாடு செய்ய என்னிடம் ரூ.5,000/- லஞ்சம் கேட்கும் எங்கள் பகுதி சர்வேயர் திரு.பாலமுருகன் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு இந்த புகார் மனுவை தயாரித்து, இத்துடன் இ சேவை விண்ணப்பத்தின் ஒப்புகைச் சீட்டு, வீட்டுப் பத்திரம், மூலப் பத்திரம், வில்லங்கச் சான்று ஆகிவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், திரு.பாலமுருகன் கேட்ட லஞ்சப் பணம் ரூ.5,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள (ஒ-ம்) **XXXXXX** (S.A.சுகுமார்), 17.05.2022.

**Sir, Received the typed complaint on today 17.05.2022 at 09.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Director of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 4/2022 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 10.00 hrs and took up investigation. Sd./- XXXXXX (A.Ambrose Jayaraja) 17.05.2022, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. S.A.Sugumar, S/o Ayyadurai, Plot No 10, Ambigai Nagar First street, Pudukkulam 2 nd Bit, Kanmaykkarai, Palanganatham Post, Madurai -3 along with Xerox copies of**

**Acknowledgment receipt dated 09.05.2022, Document No. 1338/2020 dated 03.06.2020 of Thirupprankundram Sub Registry Office, Parent document, Encumbrance certificate and related documents are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

17/05/2022

**(A.Ambrose Jayaraja)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**